56–ஏ, அகத்தியர் தெரு, அன்னதானப்பட்டி, சேலம். (2) வெ.வரதராஜபெருமாள், 19/10, மாரியம்மன் கோயில் தெரு, குகை, சேலம். (3) ஷா.அப்ரோஸ், 99/49, நாகப்பன் பிரதான சாலை, லைன் மேடு, குகை, சேலம். (4) ச.சந்தோஷ், 349, 7–வது பிளாக், ஆண்டிப்பட்டி ஏரித் தெரு, வீட்டு வசதி வாரியம், குகை, சேலம். (5) பி.பிரவீண்குமார், 149, அல்லிக்குட்டை காலனி, அன்னதானப்பட்டி, சேலம். (6) தி.வீரமணி, 19/24, கண்ணகி தெரு. அன்னதானப்பட்டி, சேலம்.

### தாதகாப்பட்டிப் பகுதி

**அமைப்பாளர்கள் :** கு.வீரக்குமார், 92, அம்மாள் ஏரி ரோடு, 7–வது குறுக்குத் தெரு, தாதகாப்பட்டி, சேலம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சி.ஜீவா, 6, சௌந்தர் நகர், தாதகாப்பட்டி, சேலம். (2) ரா.கௌதம், 29, மாரியம்மன் கோயில் தெரு, சஞ்சீவிராயன் பேட்டை, சேலம். (3) கா.முகேஷ்குமார், 380, ராஜீவ் காந்தி தெரு, களரம்பட்டி, சேலம். (4) சீ.கவியரசன், 11/46, ஜவகர் தெரு, செல்லக்குட்டிக்காடு, சேலம். (5) ரா.சின்ராஜ், 244/181, அம்மாள் ஏரி சாலை, அம்மன் நகர், தாதகாப்பட்டி, சேலம். (6) மோ.விமல்சங்கர், 168, மேட்டுத்தெரு, தாதகாப்பட்டி, சேலம். (7) சீ.கோகுல்ராஜ், 349/275, அண்ணா நகர், பொம்மண்ணச்செட்டிக் காடு, தாதகாப்பட்டி, சேலம்.

### கொண்டலாம்பட்டிப் பகுதி

**அமைப்பாளர் :** ப.ரமேஷ்குமார், 2/69, சிவசக்தி நகர், முதல் தெரு, சீலநாயக்கன்பட்டி, சேலம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) வெ.பார்த்திபன், 3/60 மேட்டு வெள்ளார் தெரு, சௌதேஷ்வரி நகர், கொண்டலாம்பட்டி, சேலம். (2) ஜெ.சீனிவாசன், 39/695, பிள்ளையார் கோயில் தெரு, காந்தி நகர், மணியனூர், சேலம். (3) ச.இிராஜசேகரன், 22/212, பெருமாள் கோயில் 4–வது தெரு, சீலநாயக்கன்பட்டி, சேலம். (4) கு.ராஜா, 88, மாரியம்மன் கோயில் தெரு, வடக்கு வீதி, சீலநாயக்கன்பட்டி, சேலம். (5) மா.அரவிந்த்குமார், 123, சீரங்கன் தெரு, ஜாரிகொண்டலாம்பட்டி, சேலம். (6) க.சுரேஷ்குமார், 2/13, எஸ்.வி.ஆர். காலனி, தாதகாப்பட்டி, சேலம். (7) அ.பார்த்திபன், 1/552, வ.உ.சி. நகர், உத்திரப்பன்காடு, மணியனூர், சேலம்.

### கன்னங்குறிச்சிப் பேரூர்

**அமைப்பாளர் :** ரா.பெரியசாமி, 1–வது வார்டு, தாமரை நகர், கன்னங்குறிச்சி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ர.சூரியபிரகாஷ், 24, சின்னமாரியம்மன் கோயில் தெரு, கன்னங்குறிச்சி. (2) மு.கதிரவன், 10–வது வார்டு, ஆறுமுகம் தெரு, கன்னங்குறிச்சி (3) பி.மணிகண்டன், மதுரைவீரன் கோயில் தெரு, கன்னங்குறிச்சி. (4) சு.கார்த்தி, 102, காட்டு வட்டம், கன்னங்குறிச்சி. (5) ச.பிரேம்குமார், 27, மாரிமுத்து தெரு, கன்னங்குறிச்சி.

### கருப்பூர் பேரூர்

**அமைப்பாளர் :** ம.ராஜரத்தினம், 3/11, வெள்ளாளப்பட்டி பிரதான சாலை, கருப்பூர், சேலம்.

**துணை அமைப்பாளர்கள்:** (1) ரா.ராஜா, 5/33, சந்தைப் பேட்டை ரோடு, கருப்பூர். (2) சி.சதீஷ்குமார், 12–138, குஞ்சம்மாள் தெரு, அல்லாசாமி கோயில் தெரு, கருப்பூர். (3) ச.மணிவண்ணன், பழைய மாரியம்மன் கோயில் தெரு, கருப்பூர். (4) மா.சர்மா, 71/70, குண்டூர் அருந்ததியர் தெரு, கருப்பூர். (5) கோ.ரவிசங்கர், குள்ளக்கவுண்டனூர், கருப்பூர், சேலம்.

### ஓமலூர் பேரூர்

**அமைப்பாளர் :** செ.கண்ணன், 108–109, வ.உ.சி. நகர், ஓமலூர், சேலம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ம.பாபு, 117, எல்லையம்மன் கோயில் தெரு, ஓமலூர். (2) அ.சூர்யா, கண்ணூர் மாரியம்மன் கோயில் தெரு, ஓமலூர். (3) ச.ராமச்சந்திரன், 43/15, ஒட்டர் தெரு, ஓமலூர். (4) பெ.சந்துரு, 11, காமராஜ் நகர், ஓமலூர் (5) ர.ஷெரீப், மஜீத் காம்ப்ளக்ஸ், 8–வது வார்டு, ஓமலூர். (6) த.பிரபாகரன், ஊமை மாரியம்மன் கோயில் தெரு, ஓமலூர், சேலம்.

### காடையாம்பட்டி பேரூர்

**அமைப்பாளர்:** க.மதிவாணன், 3/23, குண்டல்மேடு, காடையாம்பட்டி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சே.சுதாகர், 32–12, நாச்சினம்பட்டி, காடையாம்பட்டி. (2) கா.ஹரீஷ், 11/3, மாரியம்மன் கோயில் தெரு, காடையாம்பட்டி. (3) மா.நேதாஜி, 10–1, நாச்சினம்பட்டி, தீவட்டிப்பட்டி காடையாம்பட்டி. (4) ரா.கோகுலகண்ணன், 6/44, சந்தைப்பேட்டை, காடையாம்பட்டி.

| | |
|---|---|
| அன்பகம்<br>சென்னை – 18<br>நாள் : 15–03–2025 | **உதயநிதி ஸ்டாலின்**<br>செயலாளர்<br>தி.மு.க. இளைஞர் அணி |

## முதலமைச்சர் அறிவித்திருக்கும்

# மகளிர் நலத் திட்டங்களைப் பயன்படுத்தி இந்த சமூகத்தை மாற்றியமைப்போம்!

## உலக மகளிர் தின விழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

சென்னை, மார்ச் 16-

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (14/03/2025) வெள்ளிக்கிழமை, சென்னை - நுங்கம்பாக்கத்தில் உள்ள அன்னை தெரேசா மகளிர் வளாகத்தில் நபார்டு வங்கியின் சார்பில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி, சிறப்பாக செயல்பட்ட பெண் தொழில் முனைவோருக்கு நினைவுப் பரிசு வழங்கினார் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள்.



முன்னதாக, நபார்டு மூலமாக அமைக்கப்பட்டுள்ள விற்பனை அரங்குகளை திறந்து வைத்து பார்வையிட்டார்!

இவ்விழாவில் கனிமொழி கருணாநிதி உரையாற்றுகையில்,

“உலக மகளிர் தினம் என்பது மகளிரை சகோதரியாக தாயாக போற்றக் கூடிய வாழ்த்தக் கூடிய கொண்டாடக் கூடிய ஒரு தினம் இல்லை. இது பெண்கள், தாங்கள் போராடிப் பெற்ற உரிமைகளை நிலைநிறுத்தக் கூடிய, உரிமைகளுக்காக செல்லவேண்டிய பயணம் இன்னும் வெகுதூரம் இருக்கிறது என்று அவர்களுக்கு அவர்களே நினைவுபடுத்திக் கொள்ளக் கூடிய தினம்தான் மகளிர் தினம்.

இது வேலண்டைஸ் டே மாதிரி பூங்கொத்து கொடுப்பதற்கோ, டிஸ்கவுன்ட் சேல் போடுவதற்கான தினமோ இல்லை என்பதை நாமும் உணார்ந்துகொள்ள வேண்டும். நம்மைப் பயன்படுத்தி வியாபாரத்தை பெருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களும் உணர வேண்டும்.

பொதுவாகவே பெண்களின் முன்னேற்றத்துக்கும் எழுச்சிக்கு தடையாக இருப்பது பெண்களுக்கான கல்வி மறுக்கப்படுவதும், பெண்கள் தற்சார்புள்ளவர்களாக, பொருளாதார சுதந்திர முள்ளவர்களாக இல்லாத சூழல் இந்த சமூகத்தில் இருப்பதும்தான். எல்லாவற்றுக்கும், தான் சார்ந்திருக்கும் ஆணையே நம்ப வேண்டிய சூழலில் பெண்கள் தனது உரிமைகளுக்காகப் போராடு வதற்கோ, தன் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காகப் போராடுவதற்கோ சாத்தியமில்லாத தருணங்களை சந்திக்கின்றனர்.

**தலைவர் கலைஞரால் உருவாக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் பல்கிப் பெருகியிருக்கிறது!**

அப்படிப்பட்ட காலத்திலே.... தலைவர் கலைஞர் அவர்களால் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் இன்று பல்கிப் பெருகி தற்போதைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு மிகப்பெரிய அளவிலே வளர்ந்திருப்பதை பார்க்கிறோம்.

இன்று நபார்டு வாங்கி மூலமாக எம்பவர் ஆகியிருக்கும் பல்வேறு மகளிர் சுய உதவிக் குழுக்கள் இங்கே ஸ்டால் போட்டிருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கும்போது, மிகப்பெரிய நம்பிக்கையை எல்லோருக்கும் தரக் கூடிய நிகழ்வாக அது அமைந்திருக்கிறது.

**நபார்டு வங்கிக்கு வாழ்த்துக்கள்!**

சாதாரணமாக ஒரு கிராமத்தில், ஒரு சின்ன ஊரில் தனக்கு இருக்கக்கூடிய திறமைகள் என்னவென்று புரிந்துகொள்ள முடியாத சூழலில் இருக்கும் ஆண்கள், பெண்கள்....தனக்குள் இருக்கும் திறமை., சுற்றியிருக்கும் மக்களிடம் இருக்கும் திறமை இதையெல்லாம் தனக்கான ஒரு பொருளாதாரமாக, தனக்கான ஒரு நம்பிக்கையாக மாற்றக்கூடிய வகையிலே நபார்டு வங்கி தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே ராமலிங்கம் அவர்கள் வந்திருக்கிறார். தூத்துக்குடி மாவட்டத்திலே இருக்கும் சுய உதவிக் குழுக்களுக்கு நபார்டு வங்கியின் வழியாக மிகப்பெரிய அளவிலே உதவி செய்திருக்கிறார். எந்த கோரிக்கை வைத்தாலும் அந்த மக்களுக்கு நிறைவேற்றித் தருகிறார்.

அதேபோல தூத்துக்குடியின் பிரதிநிதிகளாக இங்கே வந்திருக்கும் இருவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் அங்கே நெய்தல் விழா நடக்கும்போது. அங்கே இருக்கும் மகளிருக்கு விழிப்புணர்வை உண்டாக்கும் வகையிலே கிட்டத்தட்ட 100 ஸ்டால்ஸ் சென்ற முறை போட்டு. எங்களாலும் முடியும் என்ற நம்பிக்கையை உருவாக்கினார்கள்.

**சுயதொழில் செய்யும் மகளிர் குழுக்கள்!**

இன்று ஒரு சகோதரியிடம் பேசிக் கொண்டிருந்தபோது... அழகான பேக்-குகள் வைத்திருந்தார். ‘நீங்க எக்ஸ்போர்ட் பண்றீங்களா?’ என கேட்டேன். ஆமா... பேக்ஸ் தைச்சு எக்ஸ்போர்ட் பண்றோம் என்று ரொம்ப சாதாரணமாக சொன்னார். தஞ்சாவூர் பக்கத்தில் இருந்து வந்த சகோதரி சொன்னபோது அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது. இங்கே மேடையில் பாராட்டும் பரிசும் பெற்ற சகோதரிகளுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மேயர் பிரியா குறிப்பிட்டதுபோல... ஒரு சாதாரண பின்புலத்தில் இருந்து வரக் கூடிய, பெண்களை வெளியே அனுப்புவதே போராட்டமாக இருக்கக் கூடிய, படிக்க அனுப்புவதே போராட்டமாக இருக்கக் கூடிய ஒரு பின்புலத்தில் இருந்து இன்று இவ்வளவு பெரிய சாதனைகளை செய்து மற்றாவர்களுக்கு முன்னுதாரணமாக மாறியிருக்கிறார்கள். இது மிகப்பெரிய விஷயம். அவர்களுக்கும் அவர்களுக்கு உதவியிருக்கும் நபார்டு வங்கி அதிகாரிகளுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்

பெண்களின் கல்வி எந்த காலத்திலும் தடைபட்டுவிடக் கூடாது என்றுதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் புதுமைப் பெண் என்ற, கல்லூரி படிக்கும் போது மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்.

அதேபோல. தன் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்காமல் இருக்கும் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கி வருகிறார். அந்த ஆயிரம் ரூபாயை செலவு செய்ய பெண்கள் யாரிடமும் அனுமதி வாங்க வேண்டியதில்லை. பொருளாதார சுதந்திரம் என்றால் என்ன என்பதை அந்த ஆயிரம் ரூபாய் பெண்களுக்கு சொல்லித் தருகிறது. அதை அடுத்த தலைமுறைக்கு பெண்கள் கடத்தி செல்வார்கள், அவர்களுக்கும் ஒரு புரிதல் ஏற்படும் என்ற அடிப்படையிதான் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படுகிறது. இதேபோலத்தான் விடியல் மகளிர் பயணமும்.

பெண்கள் தங்கள் வாழ்க்கையை தாங்களே தீர்மானிக்க வேண்டும், முடிவெடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் நமது முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு நாளும் பெண்களுக்கான திட்டங்களை உருவாக்கித் தந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்த சமூகம் நமக்கு போட்டிருக்கும் தடைகளை நினைத்து நின்றுவிடாமல், அரசாங்கமும் முதலமைச்சர் அவர்களும் அறிவித்திருக்கும் திட்டங்களை எல்லாம் பயன்படுத்தி... இந்த சமூகத்தை நாம் எப்படி மாற்றியமைப்பது, அந்த தடைகளைத் தகர்த்துவிட்டு வாழ்க்கையில் எப்படி முன்னேறுவது என்பதை நாம் உணர வேண்டும்.

எத்தனையோ எதிர்ப்புகள் வந்தாலும் அதை உடைத்துவிட்டு முன்னேறுவதுதான் உங்களுக்கு மட்டுமல்ல, உங்களின் மகளுக்கு நீங்கள் தரக் கூடிய மிகப்பெரிய சீர் சீதனம். நீங்கள் அவர்களுக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டுவதுதான் மிகப் பெரிய சீர், சீதனம்.

**பெண்களுக்குப் பொருளாதார சுதந்திரம் தருவீர்!**

நகை சேர்த்துக் கொடுத்தால், அதை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். வேறு எதைக் கொடுத்தாலும் அது இருக்குமா இருக்காது என்பது நிச்சயமில்லை. ஆனால் உங்கள் மகளுக்கு நீங்கள் தரக் கூடிய தன்னம்பிக்கை, பொருளாதார சுதந்திரம், கல்விதான் மிகப்பெரிய பரிசாக இருக்க முடியும்.

அதேநேரத்தில் மகளிர் தினத்தில் நம் வீட்டு பிள்ளைகளை- ஆண்களை வளர்க்கும்பொது, ‘பெண்களை சமமாக மதிக்க வேண்டும்., சம உயிர். நீ எப்படி இந்த சமூகத்தில் வெளியே போக உனக்கு உரிமை இருக்கிறதோ, நினைத்ததை உடுக்க உரிமை இருக்கிறதோ, நீ தேர்ந்தெடுத்த வேலைக்கு செல்வதற்கு உரிமை இருக்கிறதோ...அதே உரிமை அந்த பெண்ணுக்கும் இருக்கிறது. அந்த இடத்தில் அவள் இருக்கும் போது அவளை மதிக்கக் கற்றுக் கொள். ஜட்ஜ் பண்ண யாருக்கும் எந்த உரிமையும் கிடையாது என்பதை சொல்லிச் சொல்லி வளர்த்தாலே இந்த சமூகம் நிச்சயம் மாறும். உங்கள் அனைவருக்கும் வாழ்த்துகள்” என உரையை நிறைவு செய்தார் கனிமொழி கருணாநிதி எம்.பி.

இதில் மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு, சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், நபார்டு தலைமை பொது மேலாளர் ஆனந்த், நபார்டு பொது மேலாளர் ஜோதி ஸ்ரீனிவாஸ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தமிழ்நாடு அரசின் 2025–2026 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பாக நேற்று முன்தினம் (14.03.2025) சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.




தருமபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலத்தில் ஆர்.சிவகுரு தலைமையில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் கம்பம்.செல்வேந்திரன், மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன், வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி., சேலம்.மு.கபில், ஆகியோர் கண்டன உரையாற்றினர். விழா ஏற்பாடுகளை பி.என்.சி. மகேஷ்குமார், ஹரிபிரசாத், தீ.கோடீஸ்வரன், தங்கசெழியன், நாசர் செய்திருந்தனர்.